L55

எண்.6637/கோ.1/இசநி/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்பு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்(3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009
---

தொலைபேசி எண். (0413)2276098
புதுச்சேரி தேதி: 15 JUL 2020

## சுற்றறிக்கை

பொருள்: இசநி – கொரோனா வைரஸ் பரவல் தடுக்கும் பொருட்டு 2020-ஆம் ஆண்டு ஆடி திருவிழா, அனைத்து திருவிழாக்கள் மற்றும் தேர்த்திருவிழா ரத்து செய்தல் - அறிவுறுத்தல் - தொடர்பாக

****

மேலே கூறியுள்ள பொருளின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. திருக்கோயில்களில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி இத்துறையானது அவ்வப்போது மேற்படி வைரஸ் பரவலை தடுக்கும்பொருட்டு கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள் குறித்து அவ்வப்போது திருக்கோயில் நிர்வாகத்தினருக்கு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

3. இந்நிலையில், இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் பல்வேறு கோயில் நிர்வாகங்கள் எதிர்வரும் ஆடித்திருவிழா, தீமிதிவிழா மற்றும் ஒருசில தேர்த்திருவிழா போன்றவைகளை நடத்துவதுபற்றி அறிவுறுத்தும்படி கோரியிருந்தனர்.

4. எனவே வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டும் மேலும் சில முக்கிய ஆகம விதிகளை பின்பற்றும் பொருட்டும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அனைத்து கோயில்களிலும் மறு உத்தரவு வரும்வரை அனைத்து திருவிழாக்களும் ரத்து செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

i. அன்றாட நித்தியபடி பூஜைகள் மற்றும் அர்ச்சனைகள் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் இன்றி தற்பொழுது உள்ள முறையில் நடைபெறவேண்டும்.

ii. திருவிழாக்களின் முக்கிய தினங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட குருக்கள் சிறப்பு பூஜைகள் போன்றவைகளை உரிய சமூக விலகல் விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளலாம் அதற்கும் கூட பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அனுமதியில்லை.

iii. உபயதாரர் (அ) நன்கொடைதாரர் பூஜையின்போது, பூஜைக்குண்டான கட்டணம்(அ) தொகையை உபயதாரர் (அ) நன்கொடைதாரரிடமிருந்து பெற்று அவரின் பெயரில் பூஜைசெய்தல் வேண்டும். அச்சமயம் உபயதாரர் (அ) நன்கொடைதாரர்கள் ஐந்து நபர்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

iv. முடிந்தால் மட்டும் திருக்கோயில் நிர்வாகத்தினர் முக்கியமான மூலவர் சன்னதிகளை தவிர்த்து ஏனைய புஜைகள் மற்றும் அர்ச்சனைகளை நேரலையில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யலாம்.

15/07/2020

**(அ.சிவசங்கரன்)**
**ஆணையர்**

**பெறுநர்:**

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அனைத்து திருக்கோயில்கள்.

நகல் பெறுநர்:

1. செயலர்(இசநி), தலைமைச் செயலகம், புதுச்சேரி.
2. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர்.
4. இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி.

Scanned with CamScanner